[திரு. மு. கண்ணப்பன்] [2007 மார்ச் 28

எனவே, தொழிலாளர்கள் பழி வாங்கப்படுகின்ற போக்கைக் கைவிடுகின்ற வகையிலும், உடனடியாக அந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கும் அரசு தலையிட்டு வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு, தொழில் வளர்ச்சியும் தேவை, அதே நேரத்தில் தொழிலாளர் உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அக்கறைகொண்ட அரசு. வேண்டுமானால் ஆணையர் மட்டத்திலே பேசி, இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்க்க ஆவன செய்யும்.

2. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்து எட்டு முதல் முப்பத்து இரண்டு வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2007–2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதின்மூன்றாவது சட்டப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரில் 2007–2008 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பேசுவதற்கான ஒரு வசந்த வாய்ப்பினை எனக்கு வழங்கிய, அன்னைத் தமிழ்நாட்டை ஆளப் பிறந்த இன்பத் தமிழ்நாட்டின் எதிர்கால முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி)